செ.வெ.எண்:17/ஜனவரி நாள்:11.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பாக ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 41 குழந்தைகளுக்கு மொத்தம் ரூ.4,10,000/- கல்வி உதவித்தொகை**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார் ,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.01.2016) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார் ,இ.ஆ.ப., அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகையினை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஏதுவாக மாதந்தோறும் உதவித்தொகை வழங்கிட ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் நிதி ஆதரவு மற்றும் வளர்ப்பு பராமரிப்பு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2015-2016 நிதியாண்டிற்கான 5 மாதத்திற்கான தொகை தலா ரூபாய் ஒரு குழந்தைக்கு 5 மாதங்களுக்கு ரூ.10,000 /- வீதம் 41 குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.4,10,000/- யினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார் ,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உதவித்தொகை மாணவர்களின் வங்கிக்கணக்கில் மின்னணுமயமாக்கல் (ECS) மூலம் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**

**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**